தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1971 ஜூலை 29.

TAMIL NADU LEGISLATURE 11 APR 197 MADRAS

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின்பு 1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரையிலும் கோயில்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்தவரும், 1959-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டுவரை சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவராக இருந்தவருமான திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள், 28—7—1971-ம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Separate University at Coimbatore

* 527 Q.—Thiru N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to start a separate University at Coimbatore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, கோவையில் இப்பொழுது விவசாயப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், இந்தப் பல்கலைக்கழகத்திற்கு மற்ற பல்கலைக்கழகத்திற்கு இருக்கக்கூடிய வசதி வாய்ப்புகளை நமது கல்வி இலாகா செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விவசாயப் பல்கலைக்கழகம் தனியாக அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பல்கலைக்கழகமாகும். மதுரையில் இருக்கும் விவசாயக் கல்லூரி, கோயம்புத்தூரில் உள்ள விவசாயக் கல்லூரி ஆகியவற்றை இணைத்து அந்தப் பல்கலைக்கழகம் செயல்படும். இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து நான்கு மாவட்டங்களை எடுத்து, நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சியையும் கோயம்புத்தூரையும் யூனிவர்ஸிடி ஸென்டராக, மையமாக வைக்கலாம் என்ற கருத்துரு மட்டும் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு பல்கலைக்கழகம் வைப்பதென்றால் பெரும் செலவு ஏற்படுகிற ஒன்றாகும். மதுரைப் பல்கலைக்கழகம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாலும், அதற்கே செய்யவேண்டிய பணிகள் முழுவதும் செய்ய இயலாதிருக்கின்ற நிலையிலும் இப்பொழுது கோயம்புத்தூரில் பல்கலைக்கழகம் அமைப்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. ஆனால், கோயம்புத்தூர், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் பல்கலைக்கழக மையங்கள் வைப்பதுபற்றிய கருத்துரு இருந்து கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: கோவை நகரத்தில் ஏராளமான பொறியியல் கல்லூரிகளும், பட்டப் படிப்புக் கல்லூரிகளும், இருப்பதால் அங்கே பல்கலைக்கழகம் அமைப்பது அங்கிருக்கும் மக்களுக்குப் பயன்படும். மேலும், பல்கலைக்கழகம் அமைப்பதன் மூலம் பல்கலைக்கழக மானியக் கமிஷனிலிருந்து மானியங்கள், நிதி ட்தவி கிடைக்க வாய்ப்பு இருப்பதால், கோவை மாவட்டத்தில் விரைவில் ஒரு பல்கலைக்கழகம் துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் அதிகப் பலன் ஏற்பட முடியாது. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் தனித்தனிச் சிறப்புத் தன்மை கொண்டு இயங்குகின்றது. பல்வேறு பல்கலைக் கழகங்களை அமைக்கும்பொழுது சென்னையில் தயாரிக்கப்படுகின்ற கேள்வித் தாள்களைக் கோயம்புத்தூரில் தயாரிக்க வேண்டியிருக்கும். அவையும் அதே வகையில்தான் இருக்குமென்றால் பெரும் செலவு ஆகும். மதுரைப் பல்கலைக்கழகத்தை அமைத்திருப்பதன் அடிப்படையில் அதனுடைய அமைப்பு முறைகளையெல்லாம் கண்டு, மற்றொரு பல்கலைக்கழகத்தை அமைப்பதுபற்றிப் பின்னர்தான் நாம் யோசிக்க வேண்டும். மதுரைப் பல்கலைக்கழகக் கட்டடங்கள் கட்டுவதற்கே பத்து கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படுகிறது. வேறொரு பல்கலைக்கழகம் அமைப்பதென்றால் பெருஞ்செலவு ஏற்படும். எனவேதான் இப்பொழுது அதைப்பற்றிய செயற்குறிப்பு இல்லை

1971 ஜூலை 29]

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: தலைவர் அவர்களே, புதிய பல்கலைக் கழகங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கூடுமானவரையில் ஒரு கோடி மக்கள் வாழுகின்ற ஒரு பகுதியில் பல்கலைக்கழகம் இருக்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுதே தனியாக, ரெஸிடென்ஷியல் யூனிவர்ஸிடி என்ற முறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. கல்லூரிகளோடு இணைந்து விளங்கும் பல்கலைக்கழகங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

திரு. ஏ. சி. நரசிம்மன்: கோயம்புத்தூரிலும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதால் மத்திய சர்க்காரிலிருந்தோ அல்லது யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷனிடமிருந்தோ மானியம் அதிகமாகக் கிடைக்கும் அல்லவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கட்டடங்கள் அமைப்பதற்கு அவர்களிடமிருந்து மானியம் கிடைக்காது. ஆய்வுக்கூடம் வைப்பதற்கு, நூல் நிலையம் வைப்பதற்கு என்று குறிப்பிட்ட சிறு அளவுதான்—இலட்சக்கணக்கில்தான்—தருகிறார்கள். கோடிக்கணக்கில் அவர்கள் தருவதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கோயம்புத்தூர், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் பல்கலைக்கழக மையங்கள் அமைக்கப்படுவதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மையம் கோவையில் இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கான முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

Job Oriented Courses

* 528 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a job oriented syllabus for diploma courses in Civil, Mechanical and Electrical Engineering in the Polytechnics of the State is under the consideration of the Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட துறைகளில் வேலைச்சார்புடைய பட்டைய படிப்பு 1970–71-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது—

(1) சிற்பக்கலை உதவியாள நிலை.
(2) சர்க்கரை தயாரிப்பு நுட்ப இயல்.
(3) மின் கருவிகள் நுட்ப இயல்.

மேலும் 1971–72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட துறைகளில் வேலைச் சார்புடைய பட்டைய படிப்பு புகுத்தப்படும்—

(1) விவசாயப் பொறி இயல்.
(2) வெல்டிங் நுட்ப இயல்.